*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 7, Issue 03 (March -2026)*
www.tamilmanam.in
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor | Multidisciplinary
Issue DOI: https://doi.org/10.63300/tm07032026

# Life Principles Reflected in Purananuru

**Dr. M. Malathi*,**

Academic Consultant, Department of Tamil, S.V.U. College of Arts, S V University,
Tirupati, 517 502, AP.
ORCID: https://orcid.org/0009-0009-91987018
*Correspondence: jinishal2000@gmail.com,

**Article Info**
Received on 26-Feb-2026, Revised on 27-Feb-2026, Accepted on 05-Mar-2026, Published on 09-Mar-2026

## ABSTRACT

Among the Sangam literary works, Purananuru, one of the Eight Anthologies (Ettuthokai), stands as a rare and invaluable literary treasure that vividly portrays the public life of the ancient Tamils. The poems in this work clearly articulate fundamental values of life such as war, polity, charity, moral conduct, self-respect, education, and humanism. This study examines the ethical principles of life presented by the poets of Purananuru under four major themes: the excellence of charity, the elevation of moral conduct, the nobility of kingship, and the self-respect of poets. The study concludes that Sangam-age Tamils did not regard material wealth as the ultimate goal of life; instead, this literary work firmly establishes that "living well oneself and enabling others to live well" was considered the highest ideal of life.

***KEYWORDS:*** *Puram-Life Principles -Excellence of Charity -Moral Elevation -Qualities of a King.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 03 (March -2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

# புறநானூறு சுட்டும் வாழ்வியல் நெறிகள்

*முனைவர் மு. மாலதி, உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை, திருவேங்கடவன் பல்கலைக்கழகக் கலைக் கல்லூரி, திருவேங்கடவன் பல்கலைக்கழகம், திருப்பதி – 517 502, ஆந்திரப்பிரதேசம், இந்தியா.

**ஆய்வுச் சுருக்கம் (Abstract)**

சங்க இலக்கியங்களில் எட்டுத் தொகை நூல்களுள் ஒன்றான புறநானூறு, தமிழர்களின் புறவாழ்க்கையை முழுமையாக வெளிப்படுத்தும் அரிய இலக்கியச் செல்வமாக விளங்குகிறது. இந்நூலில் இடம்பெறும் பாடல்கள், போர், அரசியல், ஈகை, ஒழுக்கம், தன்மானம், கல்வி, மனிதநேயம் போன்ற அடிப்படை வாழ்வியல் நெறிகளைத் தெளிவாக எடுத்துரைக்கின்றன. இவ்வாய்வு, புறநானூற்றுப் புலவர்கள் உலகிற்குத் தந்த வாழ்வியல் அறங்களை ஈகைச் சிறப்பு, ஒழுக்க உயர்வு, வேந்தனின் சிறப்பு, புலவர்களின் தன்மானம் என்ற நான்கு முக்கியத் தலைப்புகளின் கீழ் ஆராய்கிறது. ஆய்வின் முடிவில், சங்ககால தமிழர்கள் பொருளை வாழ்வின் இறுதி இலக்காகக் கொள்ளாமல், வாழ்தலும் வாழச் செய்தலும் என்பதே உயரிய வாழ்வியல் நெறி எனக் கருதியதை இவ்விலக்கியம் உறுதிப்படுத்துவதாக விளங்குகிறது.

**ஆய்வு நோக்கம்**

புறநானூறு எனும் சங்க இலக்கிய நூல் தமிழர்களின் வாழ்க்கையில் வலியுறுத்தும் ஈகை, ஒழுக்கம், தன்மானம், அரசியல் அறம், கல்விச் சிறப்பு, புலவர்களின் சமூகப் பொறுப்பு போன்ற வாழ்வியல் நெறிகளை ஆராய்ந்து விளக்குவதாகும். மேலும், சங்ககால சமூகத்தின் அறவாழ்க்கை அமைப்புகளைப் புலப்படுத்துதல் மனித உயர்வுக்கான அடிப்படை நெறிகளாக புறநானூறு முன்வைக்கும் கருத்துகளை வெளிக்கொணருதல்
இன்றைய சமூக வாழ்வுடன் இந்நெறிகள் கொண்டுள்ள பொருத்தத்தைச் சுட்டிக்காட்டுதல் என்பனவும் இவ்வாய்வின் துணை நோக்கங்களாகும்.

**திறவுச் சொற்கள்** : புறப்பொருள்-வாழ்வியல் நெறிகள்-ஈகைச் சிறப்பு-ஒழுக்க உயர்வு - வேந்தன் பண்புகள்

**முன்னுரை**

பழங்காலத் தமிழர்களின் பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கங்கள் பற்றிய செய்திகள் எடுத்துக் கூறுகின்ற நூலாக சங்க இலக்கியம் விளங்குகின்றது. சங்க இலக்கியம் 'பாட்டும் தொகையும்' என்று வகைப்படுத்தப்படுகிறது. பாட்டு என்பது பத்துப்பாட்டு, தொகை என்பது எட்டுத் தொகை. எட்டுத் தொகை நூல்களில் புறப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்டு


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 03 (March -2026)*
[www.tamilmanam.in](http://www.tamilmanam.in) *DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

தமிழர்க்குக் கிடைத்த பெருங்கருவூலம் என்று அறிஞர்களால் போற்றப்படுகிறது. அதற்கு காரணம் புறநானூறு உலகிற்குப் பல அரிய உண்மைகளைக் கூறுகின்ற தன்மையால் அப்பேற்றினைப் பெறுகிறது. புறநானூற்றுப் புலவர்கள் தன்மானமிக்கவர்களாகவும், வேந்தர்களின் சிறப்பை உரைப்பவர்களாகவும், வேந்தர்கள் தவறு செய்யும்போது இடித்துரைப்பவர்களாகவும், உலக நிலையாமையை எடுத்துக்கூறி ஈகையின் சிறப்பை விளக்குபவர்களாகவும், உலக நிலையாமையை எடுத்துக்கூறி ஈகையின் சிறப்பை விளக்குபவர்களாகவும், மனிதர்கள் கடைபிடிக்க வேண்டிய உலகியல் நெறிகளைச் சுட்டுபவராகவும் விளங்கியுள்ளனர் என்பதைத் தெளிவாக உணரமுடிகிறது. புறநானூற்றுப் புலவர்கள் உலகிற்கு வழங்கிய வாழ்வியல் நெறிகளை கூறும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

**புலவர்களின் ஈகைச் சிறப்பு**

அனைத்து சமயங்களும் ஈகையினைப் புகழ்ந்தும் வறியோர்க்கு ஒன்று ஈவதே ஈகை என்றும் கூறுகின்றன. பழங்காலத்தில் வாழ்ந்த தமிழர்கள் தமக்குக் கிடைத்த செல்வத்தைத் தாமே துய்க்க வேண்டும் என்று எண்ணாமல் அனைவரும் இன்புற்று வாழவேண்டும் என்ற பரந்துபட்ட உயர்ந்த நெறியோடு வாழ்ந்தனர். தாம் துன்புற்ற காலத்தில் உதவியவர்க்கு நன்றி மறவாது, செல்வம் வந்த காலத்தில் அவர்களுக்கு உதவ வேண்டுமென்றும் தமக்கு உதாவதவர்க்கும், வறுமை அவரை எய்தும் காலத்தில் உதவவேண்டும் என்ற தன்னலமற்ற போக்கினையும் புறநானூற்றுப் புலவர் பெருஞ்சித்திரனாரின் பாடல் வாயிலாகக் காணமுடிகிறது.

குமண வள்ளலிடம் பெற்ற பெருஞ்செல்வத்தைத் தன் மனைவியிடம் கொடுத்துப் பின்வருமாறு கூறுகிறார்.

**இன்னோர்க்கு என்னாது, என்னொடும் சூழாது வல்லாங்கு வாழ்தும் என்னாது, நீயும்**

**எல்லோர்க்கும் கொடுமதி** (புறம் : 163 )

இப்பாடலின் வாயிலாகப் பெருஞ்சித்திரனார், தான் பெற்ற பரிசிலை மனைவியிடம் கொடுத்து இதை வைத்துக் கொண்டு நீண்ட காலம் வளமாக வாழலாம் என்று எண்ணாதே. மற்றவருக்கு கொடு என்னும் கூற்று புலவரின் நல்லுள்ளத்தைக் காட்டுகிறது.

**ஈதல் இசைபட வாழ்தல்ளூ அதுவல்ல (து)**

**ஊதியம் இல்லை உயிர்க்கு** (குறள்: 231)

குறளுக்கேற்ப புலவரின் எண்ணம் விளங்குவதை அறியமுடிகிறது.

புறநானூற்றுப் புலவர் நக்கீரர் தம் பாடலில் எவராயிருந்தாலும் உண்ணப்படும் பொருள் நாழித் தானியமேளூ உடுக்கப்படுபவை அரை ஆடை, மேலாடை என்ற இரண்டே. இவைபோல பிற உடல் உள்ளத் தேவைகளும் ஒன்றாகவே விளங்கும். அதனால் செல்வத்துப் பயனாவது, வறியவர்க்கு உவந்து கொடுத்தலே என்று குறிப்பிடுகிறார். ஆனால் தாமே உண்டு இனிது வாழ்வோம் என்றெண்ணி தவறினவர் வாழ்வுகளே பலவாகும் என்று கூறுகிறார். அதைத் தம் பாடலில்,



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 03 (March -2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

**உண்பது நாழி உடுப்பவை இரண்டே**
**பிறவும் எல்லாம் ஓரொக்கும்**

**செல்வத்துப் பயனே ஈதல்** (புறம் : 189) என்று குறப்பிட்டு செல்வத்துப் பயன் அஃதற்றவர்களுக்கு உதவுதலே எனும் தம் கொள்கையைக் குறிப்பிடுகிறார்.

அறவழியில் பொருளீட்டித் தானும் இன்புற்றுப் பிறர்க்கும் ஈந்து அவர்களையும் இன்புறுத்துவாழ்வதே தமிழரின் வாழ்க்கை நெறி எனச் சுருங்கச் சொல்லலாம். அதாவது வாழ்தலும் வாழச் செய்தலும்' என்று குறிப்பிடுகிறார். இதன் மூலம் சங்கத் தமிழர்களின் வாழ்க்கை நிலைகள் மேம்பட்ட தன்மைகளாக விளங்கியமை புலனாகிறது.

**ஒழுக்க உயர்வு**

மனிதனை விலங்கிடமிருந்து பிரித்துக் காட்டுவது ஒழுக்கவுணர்வு. மண்ணில் வாழும் மனிதர்களுக்கெல்லாம் ஒழுக்கம் உயிரைக்காட்டிலும் மேலானதாகும் என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார். எனவே,

**ஒழுக்கம் விழுப்பம் தரலான், ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்**(குறள் : 131) என்று ஒழுக்கத்தின் உயர்வை வலியுறுத்துகிறார்.

புறநானூற்றில் ஔவையாரின் பாடல், மக்களின் ஒழுக்கநிலைகளைப் பொறுத்தே ஒரு நாடு சிறந்த நாடாக திகழ்வதற்கு அடிப்படை என்று கூறுகிறது.

**நாடா கொன்றோளு காடா கொன்றோளு**
**அவலா கொன்றோளு மிசையா**
**கொன்றோளு எவ்வழி நல்லவர் ஆடவர்,**
**அவ்வழி நல்லைளு வாழிய நிலனே** ! (புறம் : 187)

முதுமைக் காலத்தில் மயிர் நரைத்தல் என்பது இயற்கை. ஆனால் ஆண்டுகள் பலவாகியும் மயிர் நரைக்காமலிருந்த புலவர் பிசிராந்தையாரை நோக்கி அவரோடிருந்த சான்றோர் பலர் வினவ, பிசிராந்தையார்,

மாண்ட என் மனைவியோடு மக்களும் நிரம்பினர்
**யான்கண் டனையர் என் இளையரும்**
**வேந்தனும் அல்லவை செய்யான்**
**காக்கும் அதன்தலை ஆன்று அவிந்து**
**அடங்கிய கொள்கைச் சான்றோர்**
**பலர்யான் வாழும் ஊரே** (புறம் : 191)

என்று தன் பாடலில் தன் மனைவி மாட்சியுடையவள் மக்களோ அறிவு நிரம்பியவர்கள் ஏவலரோ மாறான செயல்கள் செய்யாதவர் என்று விளக்குகிறார். மேலும் எம் அரசனும் நெறிமுறையோடு மக்களைக் காத்து வருகின்றான். இவற்றிற்கு மேலாக கற்றறிந்த சான்றோர் நெறிமுறையோடும் குறிக்கோளுடனும் வாழுகின்ற ஊரின்கண் தான் வாழ்வதால் நீண்ட காலமாகியும் நரைமயிர்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

இல்லாத தன்மையை விளக்குகிற மூலம் ஒழுக்க நிலை ஊரில் உள்ள அனைவருக்கும் உயிர்போன்றது என்பதை உணர முடிகிறதுதமிழ்ச் சான்றோர்கள் ஓரறிவு முதல் ஐந்தறிவு உயிர்கள் வரை அனைத்து உயிர்களுக்கும் ஊறுவிளையக் கூடாது என்னும் உயர்ந்த நெறியுடையோர்களாக வாழ்ந்து மறைந்துள்ளார்கள். புறநானுற்றுப் புலவர் நரிவெரூஉத் தலையார் என்பார் மனிதர்களுக்கு இருக்க வேண்டிய அடிப்படையான நெறிமுறைத் தன்மைகளைத் தன் பாடலில் எடுத்துரைக்கிறார்.

**பல்சான்றீரே ! பல்சான்றீரே !**
**நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்,**
**அல்லது செய்தல் ஓம்புமின்**
**எல்லாரும் உவப்பது அன்றியும்**
**நல்லாற்றுப் படூஉம் நெறியுமார் அதுவே** (புறம் : 195)

இப்பாடலின் மூலம் புலவர் உலக மக்கள் அனைவரும் விரும்பும் செயல் நல்வினைகள் செய்யாவிடினும் தீவினைகளை செய்யாது விலக்குங்கள் என்று அறிவுறுத்துகிறார். புலவர் கணியன் பூங்குன்றனின் பாடலில் வாழ்க்கையின் நிலையினை எடுத்துக் கூறி மக்களை மதிப்பது அவரவர் ஒழுகும் ஒழுக்கம் ஒன்றையே யாமும் கருதுவோம் என்று புலப்படுத்துகிறார். அதைத் தம் பாடலில்,

**பெரியோரை வியத்தலும் இலமே**
**சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே** (புறம் : 192)

என்று விளக்குகிறார்.

**வேந்தனின் சிறப்பு**

பழங்காலத்தில் வாழ்ந்த மன்னர்கள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினர். புலவர்களைப் போற்றினர். கல்விக்கு இன்றியமையாத சிறப்பினை அளித்தனர். சங்ககால மன்னர்கள் பொருட்செல்வத்தை மட்டுமல்லாது கல்விச் செல்வத்தையும் விரும்பினார்கள் என்பதை இரா.பி.சேதுபிள்ளை என்பார், முற்காலத் தமிழ் மன்னரிற் பலர் பொன்மலர் மணமும் பெற்றாற் போன்று, புவிச் செல்வத்தோடு, கவிச் செல்வமும் உரையராய் விளங்கினார்கள்" என்று குறிப்பிடுகிறார்.

**உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்**
**பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே** (புறம் : 183)

என்ற பாடலின் மூலம் உணர்த்துகிறார்.

சேரநாட்டை ஆண்ட மன்னர்களில் சேரமான்கணைக்கால் இரும்பொறை சிறப்பு வாய்ந்தவனாக விளங்கினான். அவன் சோழன் செங்கணானிடம் பெரும் போர் செய்துத் தோற்று அவனால் சிறையின் அடைக்கப்பட்டான். சிறையிலே ஒருநாள் தண்ணீர் தாகமுற்று வருந்தியபோது சிறைகாவலனிடம் தண்ணீர் கேட்க, அவனோ காலம் தாழ்த்திக் கொடுக்க அதைப் பருக மனமின்றி 'என்னைப் போல இரந்து வாழ்பவர் இவ்வுலகில் அரசர் என்று மதிக்கப்பெறார்' என்று தண்ணீர்



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 7, Issue 03 (March -2026)*
www.tamilmanam.in
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

பருகாமல் உயிரிழந்தான்.

அதை பின்வருமாறு பாடலில் காணலாம்.

**தாம் இறந்து உண்ணும் அளவை**
**ஈன்மரோ இவ் உலகத் தானே** (புறம் : 74)

திருவள்ளுவரும் மானமிழந்தபின் உயிர் வாழாதாரை,

**மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னார்**
**உயிர்நீப்பர் மானம் வரின்** (புறம் : 969)

என்கிறார். பூதஞ்சேந்தனார் 'இனியவை நாற்பது 'எனும் நீதிநூலில்,

**மான மழிந்தபின் வாழாமை முன் இனிதே** (இனியவை நாற்பது, பா.13)

என்று புலப்படுத்துகிறார். இதன் மூலம் மனிதன் தன்மானம் உயிரினும் மேலானது என்னும் வாழ்வியல் நெறி காட்டப்படுகிறது.

**புலவர்களின் தன்மானம்**

புலவர்கள் புலமைத் தன்மையுடன் உயர்ந்த எண்ணங்களைக் கொண்டவர்களாக விளங்கினர். தன்னலமற்றவர்களாகவும் அருள்உணர்வு கொண்டவர்களாகவும் விளங்கினார்கள். மன்னவன் தகாத செயலைச் செய்யும்போது அவனை இடித்துரைப்பவர்களாகவும் விளங்கினர். அரசனை நெருங்கி நின்று தம் உள்ளத்தில் எழுந்த உண்மையைத் துணிவுடன் எடுத்துக் கூறினார்கள். புலவர் பிசிராந்தையார் குடிகளை வருத்தி இறையைப் பெறுவது அறியாமைக்குரிய செயலென்றும், அது நாட்டுக்குக் கேடு விளைவிக்கக்கூடிய செயலென்பதையும் தம் பாடலின் வாயிலாக வலியுறுத்திக் கூறுகிறார்.

**காய் நெல் அறுத்துக் கவலங் கொளினே,**
**மெல்லியன் கிழவன் ஆகி, வைகலும்**
**வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு,**
**பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்,**
**யானை புக்க புலம்போலத்**
**தானும் உண்ணான், உலகமும் கெடுமே** [புறம் : 184)

என்று குறிப்பிடுகிறார்.

பழங்காலப் புலவர்கள் பொருள் ஒன்றை மட்டுமே வாழ்க்கையாகக் கொள்ளாதவர்கள். எத்துனை வறுமை வந்தாலும்தன்மானம் இழக்காதவர்களாயிருந்தனர். அத்தகைய நிகழ்வைப் புறநாநூறு 208ஆம் பாடல் விளக்குகிறது. அதியமான் நெடுமானஞ்சியைப் புகழ்ந்துபாடி பரிசில் பெறச் சென்ற புலவர் பெருஞ்சித்திரனாரைக் காணமலே பணிநிமித்தம் ' காரணமாகப் பரிசிலைக் கொடுத்தனுப்புகிறான். இங்குச் செயலைப் புலவரின் உள்ளம் ஏற்கவில்லை. இச்செயலைத் தம் பாடலில்,


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 03 (March -2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

**காணாது ஈத்த இப்பொருட்டு யானோர்**
**வணிகப் பரிசிலன் அல்லேன்** (புறம். 208)

என்று குறிப்பிட்டு தகுதியறிந்து தரும் பரிசில் தினையளவேயாயினும் அதுவே எனக்கு இனிது என்று தன்மானவுணர்வினை வெளிப்படுத்துகிறார்.

சோழ மன்னன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் மன்னன் மலையமானைப் போரில் வெற்றிபெற்றதோடு மட்டுமல்லாமல் அவனுடைய குழந்தைகளை யானைக் காலில் இட்டுக் கொல்லத் துணிகிறான். அவனுடைய இந்தக் கொடிய செயலைப் புலவர் சிறிதும் தயக்கமின்றி எடுத்துரைக்கலானார். இப்புலவர் அரசனின் அனைத்துச் செயல்களையும் ஆதரிப்பவர் அல்ல. பொருளுக்காக வாழ்கின்ற புலவரும் அல்ல. இப்புலவரின் பெருமையை மு. வரதராசனார், அரசனைப் போற்றி அவன் செயலைப் புகழும் கடமை அவர்க்கு பெரிதாகத் தோன்றவில்லை. அரசன் ஆணை அவர்க்கு வலிதாகத் தோன்றவில்லை. அரசனாற் பெருஞ்செல்வாக்கும் அவர்க்குச் சிறந்ததாகத் தோன்றவில்லை. பரிசுபெறும் உரிமைபோய் அரசனது ஒறுப்புக்கு ஆளாக நேருமே என்றும் அவர் சிறிதும் அஞ்சினாரல்லர். பிறர்மேல் வைத்துக் கூறி, உலகம் பழிக்கும் என்று எடுத்துரைக்க முயலாமை என்ற தந்திரமும் அவர் கொண்டவரல்லர். அரசனை நெருங்கி நின்று தம் உள்ளத்தில் எழுந்த உண்மைகளை எடுத்துரைக்கலானார்' என்று குறிப்பிடுகிறார். அப்புலவரின் பாடல்,

**நீயே, புறவின் அல்லல் அன்றியும், பிறவும்**
**இடுக்கண் பலவும் விடுத்தோன் மருமகனை !**
**கேட்டனையாயின், நீ வேட்டது செய்ம்மே** !(புறம் : 46)

என்பதாகும்.

**முடிவுரை**

இதுகாறும் மேற்குறிப்பிட்டச் செய்திகளின் வாயிலாகப் புறநானூற்றுப் பாடல்கள் உணர்த்தும் வாழ்வியல் உண்மைகளைப் பின்வருமாறு சுட்டலாம்.. அறத்துடன் ஈட்டும் பொருட்செல்வத்தைத் தான்மட்டும் துய்க்காமல் வறியவர்க்குக் கொடுத்து வாழ்வதே வாழ்க்கை என்பதைப் புறநானூறு உணர்த்துகிறது. ஒருவனது. உயர்வு அவன் ஈட்டும் பொருளிலல்ல அவனுடைய ஒழுக்கத்திலேதான் உள்ளது என்பதை வெளிப்படுத்துகிறது.

சங்ககால வேந்தர்கள் வீரத்தில் மட்டுமல்ல, கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியமையைப் புறநானூறு புலப்படுத்துகிறது. மண்ணில் வாழும் மனிதர்கள் எத்தனை இடர் ஏற்படினும் கல்வி கற்காமல் இருக்கக்கூடாது என்ற உண்மையைப் புறநானூறு வலியுறுத்துகிறது. அக்காலப் புலவர்கள் அரசனின் புகழ் பாடுபவர்களாக இல்லாமல் தவறு கண்டபோது இடித்துரைப்பவர்களாகவும், தன்மானமிக்கவர்களாகவும் வாழ்ந்துள்ளனர்.

இவ்வாறு புறநானூறு மனித உயர்வின் வாழ்வியல் நெறிகளைத் உலகிற்கு எடுத்துரைப்பதை அறியமுடிகிறது.



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*

*DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

**துணை நின்ற நூல்கள்**

[1]. பழ. முத்துவீரப்பன் – இலக்கிய விளக்கம்

[2]. இரா.பி. சேதுபிள்ளை – தமிழ் இன்பம்

[3]. மு. வரதராசன் – தமிழ் நெஞ்சம்,

[4]. ந.சுப்பு ரெட்டியார் - திருக்குறள் உரை

[5]. புலியூர் கேசிகன் - புறநானூறு உரை

[6]. ஔவையார் – மூதுரை

## Works Cited

1. Muthuveerappan, Paza. *Ilakkiya Vilakkam*.
2. Sethupillai, R. P. *Tamil Inbam*.
3. Varatharajan, Mu. *Tamil Nenjam*.
4. Subbu Reddiar, N. *Thirukkural Urai*.
5. Puliyur Kesikan. *Purananuru Urai*.
6. Avvaiyar. *Moodhurai*.



Tamilmanam